ஓசூர் மாநகராட்சியில் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரிப்பு:

50 எம்.எல்.டி. அளவு குடிநீர் வழங்க நடவடிக்கை தேவை!

சட்டப் பேரவையில் ஓசூர் - ஒய்.பிரகாஷ் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 30 - ஓசூர் மாநகராட்சியில் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஓசூர் மாநகராட்சிக்கு 50 எம்.எல்.டி. அளவு குடிநீர் வழங்க வேண்டும் என்று நகராட்சி - குடிநீர் மற்றும் ஊரக உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கையில் ஓசூர் தொகுதி உறுப்பினர் ஒய்.பிரகாஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து பேரவையில் ஓசூர் தொகுதி உறுப்பினர் ஒய்.பிரகாஷ் பேசியதாவது:

ஒய். பிரகாஷ்: தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நூற்றாண்டு விழா காணும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2024-2025 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்பினை வழங்கிய நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று முழக்கமிட்டு தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பிரச்சாரம் செய்து, இருபது பிரம்மாண்ட மாநாடு போன்ற பொதுக் கூட்டங்களில் பேசி, நாற்பதுக்கு நாற்பது வென்ற சமூகநீதி, சமநீதி, சுயமரியாதை சமத்துவம் மற்றும் மொழிப்போர் பாதுகாப்பு அடங்கிய திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பணிவான வணக்கத்தினை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சனாதானத்தை ஒழிப்பேன் என்ற ஒற்றை வார்த்தையால் இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்த எங்கள் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், மாநில இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அதற்கும் மேலாக, ஓசூர் சட்டமன்றத் தொகுதி வாக்காள பெருமக்கள் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓசூருக்கு பல்வேறு திட்டங்கள்!

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று 3 ஆண்டுகளில் நிதி நெருக்கடி இருந்தாலும் ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் பல திட்டங்களை நிறைவேற்றி யுள்ளார். அதில் சிலவற்றை பதிவு செய்து நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ரூ.32 கோடி மதிப்பீட்டில் ஓசூர் ESI மருத்துவமனை முதல் Sishya School வரை நான்கு வழிச் சாலை; 57.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கர்நாடகா எல்லை TVS தொழிற்சாலை முதல் இராயக்கோட்டை சாலை வரை நான்கு வழிச்சாலை; 52.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர் முதல் தளி சாலையில் 8 கி.மீ. தூரம் நான்கு வழிச்சாலை; 42.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர் அசோக்கா பில்லர் முதல் ஒன்னல்வாடி வரை நான்கு வழிச் சாலை; 5.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் பழமையான MGR Marketஐ இடித்து புதிதாக Market கட்டடம்; 3.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் மீன் மார்க்கெட்; சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் பேருந்து நிலையம்; சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 420 படுக்கைகள் கொண்ட ஓசூர் அரசு தலைமை மருத்துவமனை கட்டடம்; 19.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் வணிக வளாக கட்டடம்; 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் மத்திய நூலகக் கட்டடம்; 582.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓசூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் என ஓசூர் சட்டமன்ற தொகுதியில் இந்த மூன்று ஆண்டுகளில் வரலாற்று சிறப்புமிக்க பணிகளை வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் ஓசூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்" என்ற பழமொழிக்கு ஏற்ப முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் விவசாயத்திற்கு தனி பட்ஜெட் அறிவித்து வேளாண் துறையில் பல மாற்றங்களை கொண்டு வந்து விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து திட்டங்களும் நேரடியாக விவசாய மக்களுக்கு சென்றடையும் வகையில் சிறப்பான ஆட்சி நடத்திவரும் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதுதான், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், 7,000 கோடி விவசாய கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் போன்ற மகத்தான திட்டங்களை நிறைவேற்றியது திராவிட முன்னேற்ற கழக அரசு என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதி, ஓசூர் வட்டம், சென்னசந்திரம் ஊராட்சி, மாரசந்திரம், பைரசந்திரம், உளியாளம், சென்னசந்திரம், இளையசந்திரம் மற்றும் திம்மசந்திரம் ஆகிய ஆறு இனாம் கிராமங்கள் இனாம் ஒழிப்பு சட்டத்தின்கீழ் செட்டில்மெண்ட் செய்யப்படாமல் இன்றைய தேதி வரை நிலுவையில் உள்ளது. 1965 ஆம் ஆண்டிலேயே செட்டில்மெண்ட் பணிகள் தொடங்கப்பட்டு உரிய காலத்தில் முடிவு பெற்றிருக்க வேண்டும். ஆனால், அரசின் நடவடிக்கைக்கு எதிராக இனாம்தாரர் தரப்பிலிருந்து தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்குகள் தொடரப்பட்டதன் காரணமாக இப்பணிகள் உரிய காலத்தில் நடைபெறவில்லை. தற்போது நமது அரசு பொறுப்பேற்றவுடன் 14.7.2022ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு ஓராண்டுக்குள் இந்த செட்டில்மெண்ட் பணிகளை முடிக்க அரசு, அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்னசந்திரம் ஊராட்சியில் உள்ள இந்த 6 கிராமங்கள்மூலம் சுமார் 2,482 ஏக்கர் இனாம் நிலம் உள்ளது. இதில் 600 ஏக்கர் நிலம் கௌவரப்பள்ளி அணை கட்டும்போது நீர்த் தேக்கத்திற்காக அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சுமார் 1,800 ஏக்கர் நிலம் பொது மக்கள் மற்றும் விவசாயிகளிடம் உள்ளது. கடந்த 16.8.2022 முதல் 13.1.2023 வரையில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து 1,739 மனுக்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்களால் பெறப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. நில அளவை பணிகளும் நடைபெற்று வருகின்றன. எனவே, சுமார் 30 முதல் 40 ஆண்டுகளாக விவசாயம்

செய்யும் உண்மையான விவசாயிகளுக்கு பட்டா வழங்கி, மீதமுள்ள நிலத்தினை அரசு உடமையாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்பெண்ணை ஆற்று நீர்!

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால் தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெளியேறும் உபரிநீரை கொடியாளம் தடுப்பணையிலிருந்து 68 ஏரிகளுக்கு நீரேற்று முறையில் உயர்மட்ட ஏரிகளுக்கு நீரை கொண்டு செல்லும் திட்டத்தினை செயல்படுத்தினால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர்ப் பிரச்சினை குறையும். அப்பகுதியில் உள்ள சுமார் 10,000 ஏக்கர் விவசாய நிலம் பாசனம்பெறும். விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். எனவே, இத்திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு ஓசூர் பகுதி விவசாயிகள் பல ஆண்டுகளாக பல போராட்டங்களையும், பல ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகிறார்கள். கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே வாக்குறுதியாக அளித்திருக்கிறோம். 2021 2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் திட்டமதிப்பீடு தயாரிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் விரைந்து இத்திட்டத்தினை செயல்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மேற்கு மண்டலம் பெரும்பகுதி மக்கள் விவசாயத்தை நம்பி வாழும் பகுதியாகும். இதில் பெரும்பாலும் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. எனவே, ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஊராட்சி ஒன்றியம், பாகலூர் மற்றும் பேரிக்கை அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உருளைக்கிழங்கு அதிகப்படியாக சாகுபடி செய்வதால் தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தால் இப்பகுதி விவசாய பெருங்குடி மக்கள் பயனடைவர். விதை மற்றும் விளைபொருட்கள் சேமித்து சந்தைப்படுத்த 3000 மெட்ரிக் டன் சேமிப்பு கிடங்கு மற்றும் சிப்பமிடும் கூடங்கள் அமைத்து, இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆவன செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஓசூர் மாநகரம் பெரிய அளவில் வளர்ந்து வரும் நகரம். ஓசூர் மாநகருக்கு மையப் பகுதியில் கால்நடை மருத்துவமனை உள்ளது. இவ்வாறு உள்ளதால் மாநகருக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் கால்நடைகள் மருத்துவமனைக்கு செல்வது மிகவும் கடினமாக உள்ளது. எனவே, ஆவலப்பள்ளி அருகே தோட்டகிரி பகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்தால் சுமார் 25 கிராமங்களை சேர்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும். அதேபோல், பாகலூரில் தற்போது கால்நடை மருந்தகம் உள்ளது. அதனை தரம் உயர்த்தி கால்நடை மருத்துவமனையாக மாற்றுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 20 முதல் 30 ஆண்டுகளாக வீடுகள் கட்டி பட்டா இல்லாமல் உள்ளனர். அரசு மூலமாக ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, மின் கட்டண ரசீது, வீட்டுவரி ரசீது போன்ற அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழில் நகரங்களில் ஓசூர் பெரும்பங்கு வகிக்கிறது. அதிக தொழிற்சாலைகள் நிரம்பிய ஓசூரில் தொழிலாளர்கள் தங்கள் வருங்கால வைப்புநிதி சம்பந்தமாக அதிகாரிகளை தொடர்புகொள்ள வேண்டுமெனில் சுமார் 150 கி.மீ. தொலைவில் உள்ள சேலத்திற்கு சென்று அணுக வேண்டிய சூழ்நிலை உள்ளது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் கருதி ஓசூர் சுற்றுவட்டார பகுதியிலே வருங்கால வைப்புநிதி அலுவலகம் (PF office) அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் மாநகராட்சியில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட கிருஸ்துவ மக்கள் உள்ளனர். இவர்கள் இறக்கும்பட்சத்தில் அடக்கம் செய்வதற்கு இவர்களுக்கு தனியாக இடம் இல்லை என்பது அவர்களின் நீண்ட நாள் கோரிக்கை. எனவே, ஓசூர் மாநகராட்சியில் அல்லது மாநகராட்சி அருகில் உள்ள ஏதாவது ஓர் ஊராட்சியில் சிறுபான்மை மக்களுக்கு அடக்கம் செய்வதற்கு இடம் ஒதுக்கித் தரவேண்டும்.

ஓசூரில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த கட்டடம். அது மிகவும் நெரிசலான பகுதியில் உள்ளதால், வாகனங்கள் நிறுத்துவதற்குக் கூட இடமில்லை. ஆகவே, பத்திரப் பதிவு அலுவலகத்தை இடம் மாற்றி, மாநகராட்சிக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் புதிதாக பத்திரப் பதிவு அலுவலகம் கட்டித் தருமாறும், அதிகமாக பத்திரப் பதிவு நடைபெறுவதால் பத்திரப் பதிவு அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து, பாகலூர் அல்லது பேரிகையில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வளர்ந்துவரும் ஓசூர் மாநகராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து சுமார் 6.5 MLD குடிநீர் வந்துகொண்டிருந்தது. முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, சுமார் 10 MLD குடிநீர் வழங்க ஆணையிட்டார்கள். ஓசூர் மாநகராட்சி பொதுமக்களுக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் குடிநீர் சுமார் 27 MLD ஆக உள்ளது. அங்குள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் தனியாருடன் இணைந்து மீதமுள்ள சுமார் 17 MLD குடிநீர்த் தேவையைப் போக்க வேண்டிய நிலை உள்ளது. வேகமாக வளர்ந்துவரும் மாநகராட்சியில், தற்போதுள்ள மக்கள்தொகைக்கேற்ப குடிநீர்த் தேவை அளவு சுமார் 50 MLD ஆக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் அவர்களும், நகராட்சி நிருவாகம் மற்றும் நீர் வளத் துறை அமைச்சர் அவர்களும் 50 MLD குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் சட்டமன்ற தொகுதி, ஓசூர் ஊராட்சி ஒன்றியம் பாகலூர் ஊராட்சியில் சுமார் 15,000 மக்கள் தொகையும், பெலத்தூர் ஊராட்சியில் 14,000 மக்கள்தொகையும் உள்ளன. இந்த இரண்டு ஊராட்சிகள் இணைந்துள்ள காரணத்தால், இரண்டு ஊராட்சிகளையும் இணைத்து பேரூராட்சியாக தரம் உயர்த்துமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி, வேப்பனப்பள்ளி ஊராட்சியில் சுமார் 15,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகையும், ராயக்கோட்டை ஊராட்சியில் சுமார் 26,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகையும், சூளகிரி ஊராட்சியில் சுமார் 30,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகையும் உள்ளன. மேற்கண்ட ஊராட்சிகளில் மக்கள் தொகை அதிகமாகவும், வருமானமுள்ள ஊராட்சியாக உள்ளதால் பேரூராட்சிகளாக தரம் உயர்த்துமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ராயக்கோட்டையில் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கடந்த முறை வேப்பனப்பள்ளி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. பி. முருகன் அவர்கள் சட்டமன்றத்தில் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

தளி சட்டமன்ற தொகுதி தளி ஊராட்சி ஒன்றியம் அஞ்செட்டி ஊராட்சியில் சுமார் 26,000 க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ளன. மக்கள்தொகை அதிகமாகவும், வருமானமுள்ள ஊராட்சியாகவும் உள்ளதால், அஞ்செட்டியை தளி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து அஞ்செட்டி ஊராட்சி ஒன்றியமாக மாற்றித் தருமாறும் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தருமாறும் அமைச்சர் பெருமக்கள் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர்: உறுப்பினர், கடைசி பக்கத்தினை எடுங்கள். மீதியை நான் பதிவு செய்துகொள்கிறேன்.

ஒய்.பிரகாஷ்: பேரவைத் தலைவர் அவர்களே, மீதம் உள்ள எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பேசியதாக நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதி கோரிக்கைகள்

ஓசூர் சட்டமன்ற தொகுதி ஓசூர் மாநகராட்சியில் 2 பெரிய ஏரிகள் உள்ளன. ராமநாயக்கன் ஏரி, சந்திராம்பிகை ஏரி (தர்கா ஏரி). இந்த இரண்டு ஏரிகளும் மாநகராட்சி மையப் பகுதியில் உள்ளன. மழைக் காலங்களில் ராமநாயக்கன் ஏரி நிரம்பி, சந்திராம்பிகை ஏரிக்கு வந்தடையும். சந்திராம்பிகை ஏரியிலிருந்து கிருஷ்ணா நகர், கோபி காரடன், குறிஞ்சி நகர் மற்றும் KCC நகர் பகுதி வழியாக தென்பெண்ணை ஆற்றுக்கு சென்றடைகிறது. இது சந்திராம்பிகை ஏரியிலிருந்து மாநகராட்சி குடியிருப்புகளுக்குள் சுமார் 3.30 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் வழியாக செல்கிறது. இந்த கால்வாய் இதுவரை தூர்வாராமலும், தடுப்புச் சுவர் கட்டப்படாமலும் உள்ளதால் கனமழை பெய்யும்போது உபரிநீர் இந்தக் குடியிருப்புகளுக்குள் புகுந்து மிகுந்த சேதம் அடைகிறது.

எனவே சந்திராம்பிகை ஏரியும், கால்வாயும் நீர்வளத் துறை கட்டுப்பாட்டில் உள்ளன. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் சுமார் 43 கோடி மதிப்பில் சுமார் 3.30 கி.மீ. தூரத்திற்கு இருபுறமும் நிரந்தர தடுப்புச் சுவர் அமைக்கத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் இத்திட்டத்தினை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வேகமாக வளர்ந்துவரும் ஓசூருக்கு மெட்ரோ இரயில் சேவை வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கர்நாடக மாநிலம் பெங்களூர் முதல் Electronic City வரை மெட்ரோ இரயில் சேவை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த சேவை நீட்டிப்பு செய்து கர்நாடக எல்லை முதல் ஓசூர் வழியாக சூளகிரி வரை சுமார் 30 கி.மீ. அதிகமான தொழிற்சாலைகள் உள்ள காரணத்தினால் மெட்ரோ இரயில் சேவையை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உடான் திட்டத்தின்கீழ் விமான சேவை தொடங்கப்படும் என்று ஒன்றிய அரசு கடந்த காலத்தில் அறிவித்தது. கடந்த ஆட்சியில் சட்டமன்ற கூட்டத்தொடரில் கேள்வி நேரம் மற்றும் மானியக் கோரிக்கையில் பல முறை பேசியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு ஓசூரில் விமான சேவை தொடங்கப்படுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் திடீரென ஒன்றிய அரசு ஓசூரில் விமான சேவை தொடங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று பாராளுமன்றத்தில் அறிவித்தது. சுமார் 3000 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் இயங்கிவருவதால் ஓசூரில் விமான சேவை தொடங்க முதலமைச்சர் அவர்களும், தொழிற் துறை அமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி விமான சேவை தொடங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள கெரவலப்பள்ளி அணைக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து பாதாள சாக்கடை நீரும், தொழிற்சாலைகளின் கழிவுநீரும் கலந்துவருவதால், நச்சுத் தன்மை அதிகமாகி கெலவரப்பள்ளி அணைக்கு வந்து சேருகிறது. இந்த மாசுப் பட்ட நீரினால் துர்நாற்றம் வீசி சுற்றுப்புற சூழல் சீர்கேடுகள் ஏற்பட்டு அணையிலிருந்து வெளியேறும்போது நுரையுடன் வெளியேறுகிறது. இந்த நுரை வெளியேறும்போது விவசாயிகள் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள்மீது விழுவதால் சேதம் ஏற்படுகிறது. எனவே இந்நீரினை கொடியாளம் அணைப் பகுதியில் உயர்தரமான சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்து நீரினை சுத்தம் செய்து மீண்டும் கெலவரப்பள்ளி அணைக்குச் செய்ய ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூரில் சுற்றுலா மாளிகை, பாகலூரில் புதிதாக பேருந்து நிலையம் அமைத்தல், ஓசூரில் வர்த்தக மையம், ஓசூரில் ஊடகம் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு புதிதாக கட்டடம், ஓசூரில் இளைஞர் விடுதி, ஓசூரில் திறன் வளப்பு பயிற்சி மையம், ஓசூரில் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள், ஓசூர் மாநகராட்சியில் தீயணைப்பு நிலையம், ஓசூரில் ஐ.டி பார்க் அமைத்து தர வேண்டும்

மேலும் ஓசூர் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய சாலை பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒய்.பிரகாஷ் பேசினார்.

துறையூர் தொகுதி கோம்பை - வண்ணாடு - டாப் செங்காட்டுப்பட்டி கிராமங்களுக்கு

சிற்றுந்தும் - மகளிர் கட்டணமில்லா பேருந்தும் இயக்க வேண்டும்!

சட்டப் பேரவையில் செ.ஸ்டாலின் குமார் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 30 - துறையூர் தொகுதியில் உள்ள பச்சமலை, கோம்பை, வண்ணாடு, டாப் செங்காட்டுப்பட்டி கிராமங்களில் வாழும் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் சிற்றுந்துகளும் மகளிர் கட்டணமில்லா பேருந்துகளும் இயக்க வேண்டுமாய் சட்டப் பேரவையில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார் வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் செ.ஸ்டாலின் குமார் விடுத்த வேண்டுகோளும் அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:

செ. ஸ்டாலின் குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதியில், துறையூரிலிருந்து பச்சமலையில் வாழும் பழங்குடியின மக்களுக்காக கோம்பை, வண்ணாடு ஊராட்சிகளில் 60 கிராமங்களும், அதேபோன்று உப்பிலியபுரம் ஒன்றியத்தில் உள்ள டாப் செங்காட்டுப்பட்டியில் 30 கிராமங்களும் முழுக்க முழுக்க பழங்குடியின மக்களே வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த பழங்குடியின மக்கள் பயன்படுத்துவதற்காக துறை மூலமாக அரசு சிற்றுந்து மட்டுமே இயக்கப்படுகிறது. போதிய பேருந்து வசதி இல்லாத காரணத்தால் அங்குள்ள மலைவாழ் பழங்குடியின மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே, அங்குள்ள மலைவாழ் பழங்குடியின மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, துறையூரிலிருந்து கோம்பை வண்ணாடுக்கு ஒரு சிற்றுந்தையும், ஒப்பிலியபுரம் வழியாக டாப் செங்காட்டுப்பட்டிக்கு ஒரு சிற்றுந்தையும் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்குள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள், அத்திட்டத்தையும் செயல்படுத்தி, நடைமுறைப்படுத்த முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

எஸ்.எஸ்.சிவசங்கர்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஸ்டாலின் குமார் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள மலைப் பகுதி பற்றி குறிப்பிட்டிருக்கிறார். திராவிட மாடல் முதல்வர் அவர்கள், புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததையடுத்து, முதற்கட்டமாக தற்போது 900 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. மற்ற பேருந்துகள் படிப்படியாக வந்து கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதிக்கும் அதிலே முன்னுரிமை கொடுத்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

பேராயர் பிரான்சிஸ் அவர்களை மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்கௌதமசிகாமணி சந்தித்து விக்கிரவாண்டி தொகுதி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவை திரட்டினார். புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் கென்னடி, சம்பத், செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், என்.என்.இளங்கோ, மாணவர் அணி மணிமாறன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அனபரசு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.